(ஐ) விண்ணப்பப்படிவத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பம் அரச பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சட்டத்தரணி அல்லது அரச சேவையில் பதவி நிலை அலுவலர் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

(ஒ) ஏற்கனவே அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களைத் தமது திணைக்களத் தலைவரினூடாகச் சமர்ப்பிக்க வேண்டும்.

5. **பரீட்சைக்குத் தோற்றுதல்.**- (அ) *அனுமதி அட்டை.*- விண்ணப்பப்படிவங்களை அனுப்பிய சகல விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டைகளை வழங்குவார். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி தமது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டைகளை பரீட்சை மேற்பார்வையாளர்களுக்குச் சமர்ப்பிக்க வேண்டும். அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்.

(ஆ) பரீட்சைத் திகதிக்குக் குறைந்தபட்சம் ஏழு நாட்களுக்கு முன்னரேனும் தமது அனுமதி அட்டையைப் பெறாத விண்ணப்ப தாரியொருவர் கீழ்வரும் விபரங்களுடன் உடனே "பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சைத் திணைக்களம், த. பெ. இல. 1503, பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்துடன் தொடர்புகொள்ளுதல் வேண்டும் :

(i) பரீட்சையின் பெயர் ;

(ii) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் ;

(iii) முகவரி ;

(iv) விண்ணப்பத்தினை தபாலிலிட்ட திகதியும் பதிவு இலக்கமும், தபால் நிலையமும் ;

(v) பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் தபால் நிலையமும்.

(இ) இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பதாரிகளுக்கு எவ்வித பிரயாணச் செலவுகளோ வேறு கொடுப்பனவுகளோ வழங்கப்படமாட்டாது.

(ஈ) தாம் பரீட்சைக்குத் தோற்றும் சகல பாடங்கள் தொடர்பாகவும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சை நிலைய பொறுப்பதிகாரி திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தினை நிரூபித்தல் வேண்டும். இதற்காக கீழ்வரும் ஆவணங்கள் எற்றுக்கொள்ளப்படும் :

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

6. **பாடப்பரப்பு :**

(i) விவேகப் பரீட்சை (1 மணித்தியால வினாத்தாள் - 100 புள்ளிகள்) :
பரீட்சார்த்தியின் தர்க்கரீதியாக சிந்திக்கும் ஆற்றல், கருத்துக்களைப் பகுப்பாயும் தன்மை, தீர்மானமெடுக்கும் ஆற்றல் என்பவற்றை மதிப்பிடுவதற்கான துறைசார் வினாக்களைக் கொண்டது.

(ii) தொழில்நுட்பவியல் சார் வினாத்தாள் - (2 மணித்தியாலம் - 100 புள்ளிகள்) :

1 ஆம் பகுதி - துறைசார் வினாப்பத்திரம் (காலம் : 1 மணித்தியாலம்)

2 ஆம் பகுதி - கட்டமைக்கப்பட்ட கட்டுரைகள் கொண்ட வினாத்தாள் (காலம் : 1 மணித்தியாலம்)

(அ) *அளவையும் மட்டம் எடுத்தலும்.*- சங்கிலி அளவைகள், மட்டம் எடுத்தல், தியோடலயிட் இயக்குதல், சமதள மேசை அளவைகள் பற்றிய அறிவு.

(ஆ) *கட்டிடப் பொருட்கள்.*- சீமெந்து, சுண்ணாம்பு, மணல், கல், வர்ண பூச்சுக்கள், பிளாஸ்டிக் மற்றும் கண்ணாடியிலான பொருட்களைக் கட்டிட வேலைகளில் பயன்படுத்துதல், தரமான மரப்பலகைகளை இனங்காணும் அறிவு.

(இ) *கட்டிட நிர்மாணமும் மதிப்பீட்டறிக்கை தயாரித்தலும்.*- அத்திவாரம், சுவர் கட்டுதல், கூரைக்கான மரப்பலகை, உருக்கு தூலத் தூண், கான்கிரீட் உத்திரம், கான்கிரீட் தூண்/அத்திவாரம்/மாடிப் படிகள் என்பவற்றை அமைக்கும் முறையும் அமைக்க வேண்டிய சந்தர்ப்பமும், பக்க தடுப்புச் சுவர் அளவை எடுத்தல், மதிப்பீட்டறிக்கை தயாரித்தல், கட்டிட வேலைகளுக்குத் தேவைப்படும் கட்டிடப் பொருட்களின் அளவையும் தேவைப்படும் தொழிலாளர்கள் அளவையும் மதிப்பிடல்.

(ஈ) நெகிழ்வுக் கட்டடைப்புடைய இணைப்புக்கள்.

(உ) *சேவைகள்.*- மின்சாரம், நீர், சுகாதாரம் போன்ற துறைகளில் அறிவை மதிப்பிடுவதற்கான வினாத்தாள்.

மேற்கூறிய பாடப்பரப்பில் பரீட்சார்த்தியின் அறிவை மதிப்பிடுவதற்காக தயாரிக்கப்பட்ட வினாத்தாள்.

**குறிப்பு.**- ஒவ்வொரு வினாத்தாளிலும் 40% அல்லது அதற்குக் கூடிய புள்ளிகள் பெற்றவர்களைத் தெரிவு செய்து அவர்களின் மொத்த புள்ளிகளின் அடிப்படையில் தயாரிக்கப்படும் முன்னுரிமைப் பட்டியலொன்றின் அடிப்படையில் ஆட்சேர்த்துக்கொள்ளப்படும்.

7. **பரீட்சை மொழி மூலம்.**- இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கில மொழியில் நடாத்தப்படும் பரீட்சார்த்திகள் சகல வினாப்பத்திரங்களுக்கும் ஏதாவது ஒரு மொழியிலேயே விடையளிக்க வேண்டும்.

8. **பரீட்சை நடைபெறும் இடம்.**- 2007, மே மாதத்தில் இப்பரீட்சை கொழும்பில் நடாத்தப்படும்.

